அமர்வு வழக்கு எண் : 91/2018
அ.சா. :9
பெயர் :ராஜகோபால்
நாள் :29.11.2024.

1வது எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை.

எதிரிகள் தரப்பில் 1வது எதிரியே குறுக்கு விசாரணை செய்தார்

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் மணல்மேடு காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது என்னுடன் SSI முகுந்தன் என்பவர் பணிபுரிந்தாரா என்றால் பணிபுரிந்தார். முதல் தகவல் அறிக்கையில் 1, 2 எதிரிகள் பெயர் குறிப்பிட்டு மற்றும் 5 நபர்கள் என்று குறிப்பிட்டிருப்பதால் மற்ற 5 நபர்கள் யார் என்று எனது விசாரணையில் தெரியவந்ததா கண்டுபிடித்தேனா என்றால் இல்லை. 1, 2 எதிரிகள் தலைமறைவாகிவிட்டதால் மற்ற 5 நபர்கள் யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. மற்ற 5 நபர்களை கண்டுபிடிக்காமல் 1, 2 எதிரிகளை பழிவாங்குவதற்காக புகார்தாரரின் தூண்டுதலின்பேரில் 1, 2 எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அரசு வழக்கறிஞரிடம் அபிப்ராயம் எழுத்து மூலமாக பெறப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாக பெறப்பட்டது. நான் அரசு வழக்கறிஞரிடம் அபிப்ராயம் கேட்காமலேயே நான் அரசு வழக்கறிஞரிடம் அபிப்ராயம் பெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அபிப்ராயம் கொடுத்ததாக சொல்லும் அரசு வழக்கறிஞரை சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லையே என்றால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் அபிப்ராயம் பெற்ற அரசு வழக்கறிஞர் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. அப்போதிருந்த அரசு வழக்கறிஞர். பெயர் தெரியவில்லை. 26 நாட்கள் கழித்து உடைந்து போன சிமெண்ட் சிலாப்புகள் காம்பவண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் ஆகியவற்றை கைப்பற்றிதாக சொல்லியுள்ளேன் என்றாலும் தயார் செய்யப்பட்ட சாட்சிகள் முன்பாக அவற்றை கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. 26 நாட்கள் கால தாமதமாக தடயப்பொருட்களை கைப்பற்றியதற்கு நீதிமன்றத்தில் உரிய காரணம் சொல்லியுள்ளேனா என்றால் மனு எண். 235/2010 கொடுத்து விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் அந்த கால தாமதம் ஏற்பட்டது. ரோட்டோரம் கிடந்த உடைந்து போன சிமெண்ட் சிலாப்புகள் காம்பவண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து உடைந்து போன சிமெண்ட் சிலாப்புகள் காம்பவண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் ஆகியவற்றை கைப்பற்றியபோது பிரிக்கப்பட்ட கொட்டாயின் கீற்றுகள் மூங்கில் கம்புகள் ஆகியவற்றை ஏன் கைப்பற்றவில்லை என்றால் அவை போட்டோ

எடுக்கப்பட்டது. அதை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன். 1, 2 எதிரிகள் புகார்தாரரரை தாக்க வந்ததாக சொல்லும் அரிவாள், கடப்பாறை ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் இல்லை. அவை சம்பவ இடத்தில் இல்லை. 1, 2 எதிரிகள் அவற்றை எடுத்து போயிருக்கலாம். இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் அரிவாள், கடப்பாறை, மூங்கில் கீற்று ஆகியவற்றை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 08.06.2010 அன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றாலும் அன்று சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றாலும் சரியல்ல. அசா 5 தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்து ஒரு மாதம் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் சம்பவம் நடந்த மறுநாள் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும் எது உண்மை என்றால் 08.06.2010 அன்று சம்பவ இடத்தை பார்வையிட்டு வழக்கு சொத்துக்களை கைப்பற்றியது உண்மை. 08.06.2010 அன்று 1ம் எதிரியை போலிசார் மணல்மேடு காவல் நிலையத்திற்கு அழைத்து போனதாகவும் அவரை மிரட்டி கையெழுத்து வாங்கவில்லை என்றும் அவரே வீட்டை காலி செய்து விடுவதாக எழுதிக்கொடுத்ததாகவும் அசா 5 சாட்சயிமளித்துள்ளார் என்றாலும் எது உண்மை என்றால் அவர் சொல்லியிருப்பது தவறு. அசா 1 06.03.2024 அன்று நீதிமன்றத்தில் விசாரித்தபோது 1ம் எதிரியின் குடும்பத்தை தடுத்து வைத்த நிலையில் எதசஆ 3 ஆவணத்தை எழுதிக்கொண்டு எதிரியின் வீட்டிலிருந்த பொருட்களை காவல்துறை முன்னிலையில் காலி செய்தேன் என்றால் சரிதான் என்று சொல்லியுள்ளார் என்றால் எனது விசாரணையில் அப்படி சொல்லவில்லை. 08.06.2010 அன்று எதிரி பணம் வாங்கி கொண்டு வீட்டை காலி செய்து கொடுத்ததாக அ.சா. 1 தனது சாட்சியத்தில் சொல்லியிருப்பது உண்மையா என்றால் என் விசாரணையில் அப்படி சொல்லவில்லை. சாட்சியங்களை 08.06.2010 அன்று விசாரித்தேனா என்றால் அ.சா. 1 மட்டும் 07.06.2010 அன்று விசாரித்திருக்கிறேன். மற்ற எட்டு சாட்சிகளை 08.06.2010 அன்று விசாரித்தேன். 08.06.2010 அன்றே எட்டு சாட்சிகளையும் தனித்தனியே விசாரித்தேனா என்றால் ஆமாம். அவர்கள் எப்படி வந்தார்கள் என்றால் தகவல் சொல்லி வரவழைத்தேன். 10.05.2010 அன்று புகார்தாரர் கொடுத்த மனுவின்பேரில் 08.06.2010 அன்று 1, ம் எதிரியையும் அவர் மனைவியையும் மணல்மேடு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அவர்களை துன்புறுத்தி எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் அப்படி எழுதி வாங்கியதால் 1ம் எதிரி நாகப்பட்டினம் SP மற்றும் தஞ்சாவூர் DIG க்கும் தந்தி அனுப்பியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி மேலதிகாரிகளிடமிருந்து எனக்கு எதுவும் தகவல் வந்ததா என்றால் இல்லை. 08.06.2010 அன்று சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு 1ம் எதிரி 2,75,000/- புகார்தாரிடம் பணம் வாங்கிகொண்டு எதிரி விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் அதை மணல்மேடு போலிசாரிடம் புகார்தாரர் ஹபீப்ஜான் கொடுத்ததாக சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

10.06.2010 அன்று 1ம் எதிரி இது சம்பந்தமாக மேலதிகாரிகளான காவல் ஆய்வாளர் மணல்மேடு, நாகப்பட்டினம் SP, திருச்சி காவல் துறை தலைவர், காவல் துறை தலைமை இயக்குநர் சென்னை ஆகியோருக்கு நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்திருக்கிறார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகார் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க மணல்மேடு காவல் நிலையத்திற்கு ஏதேனும் கடிதம் வந்ததா என்றால் இல்லை. 10.06.2010ல் 1ம் எதிரி குடியிருந்த வீட்டை அவரை வெளியேற்றி விட்டு நானும் இன்னும் 16 நபர்கள் சேர்ந்து இடித்ததாக 1ம் எதிரி நாகப்பட்டினம் SP க்கு 1ம் எதிரி தந்தி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி எனக்கு கடிதம் எதுவும் வந்ததா என்றால் இல்லை. 10.06.2010 ல் வீட்டை இடித்தது சம்பந்தமாக 1ம் எதிரி 15.06.2010 அன்று நடவடிக்கை எடுக்ககோரி நாகப்பட்டினம் SP, DSP மயிலாடுதுறை, மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் ஆகியோருக்கு புகார் அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி மேலதிகாரிகளிடமிருந்து எனக்கு கடிதம் எதுவும் வந்ததா என்றால் இல்லை. அந்த வீட்டை இடித்தது சம்பந்தமாக 1வது எதிரி சென்னை உயர்நீதிமன்றத்தில் CrlOP No. 14982/2010 என்ற மனுத்தாக்கல் செய்து உத்தரவு பெற்று மயிலாடுதுறை JM 1 நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருப்பது தெரியுமா என்றால் தெரியாது. 06.08.2013ல் அந்த CRlOP ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் நாகப்பட்டினம் SP, DSP மயிலாடுதுறை, மணல்மேடு இன்ஸ்பெக்டர், high court PP ஆகியோருக்கு அந்த உத்தரவு நகல் அனுப்புமாறு உத்தரவிப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 07.02.2011ல் promotion ல் மதுரைக்கு போய்விட்டேன். அப்படி நடவடிக்கை எடுக்க தவறியதால் 1ம் எதிரி JM 1, மயிலாடுதுறை நீதிமன்றத்தில் குபம. 5420/2017 என்ற மனுத்தாக்கல் செய்து 1 முதல் 17 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு பெற்றுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. மணல்மேடு காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் SP, மற்றும் மயிலாடுதுறை DSP ஆகியோருக்கு 1 முதல் 17 எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 30 நாட்களில் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்று JM–1 மயிலாடுதுறை நீதிமன்றம் 12.07.2017 ல் உத்தரவு பிறப்பித்தது தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான் 17 வது எதிரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1993ல் முதல் இன்று வரை புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. 08.06.2010 அன்று 1ம் எதிரியின் வீட்டின் பூட்டை நானும் புகார்தாரர் ஹபீப்ஜான் மற்றும் 16 நபர்கள் சேர்ந்து 1ம் எதிரியின் மகளின் B.Sc சான்றிதழ் மற்ற ஆவணங்கள் 2ம் எதிரியின் பத்தாம் வகுப்பு பள்ளிச்சான்று வீட்டிலிருந்த 20 சவரன் நகை இரும்பு பீரோ இரண்டு 1ம் எதிரியின் மனைவிக்கு சீராக வந்த கட்டில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் ஆகியவற்றை வீட்டை உடைத்து எடுத்துபோய்விட்டோம் என்றால் தவறு. அது பற்றி எனக்கு தெரியாது. வரைபடத்தில் 6 – ஹபீப்ஜான் குடியிருந்த கூறை வீடு என்று குறிப்பிட்டுள்ளேன்

என்றால் சரி. புகார்தாரர் ஹபீப்ஜான் கொடுத்த புகாரில் தான் மாடவிளாக மேலவீதி நம்பர் 2 கடலங்குடி என்ற விலாசத்தில் குடியிருப்பதாக சொல்லியுள்ளதால் நான் மாதிரி வரைபடத்தில் 6 ஆக குறிப்பிட்டிருக்கும் இடத்தில் ஹபீப்ஜான், த/பெ. ஈசாக்ஷாகிப் கூறை வீடு என்று குறிப்பிட்டுருப்பது தவறு என்றால் சரியல்ல. புகார்தாரர் ஹபீப்ஜானுக்கு சாதகமாக கடலங்குடி கிராம நிர்வாக அலுவலர் தென்னரசுவை பயன் படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் 11 பேரும் 1ம் எதிரி வீட்டை இடித்துள்ளார்கள் வீட்டில் இருந்த பொருட்களை அபகரித்துள்ளார்கள் என்றாலும் அவர்களை புகார்தாரருக்கு சாதகமாக இந்த வழக்கில் பயன்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. சிவில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1, 2 எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து 3 கோடி ரூபாய் மதிப்புள்ள வீட்டை ஹபீப்ஜானிடம் நானும் ஆய்வாளரும் ஒப்படைத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் எந்த குற்றச்செயல்களிலும் எந்த காலத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி 1, 2 எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மோசடியான நடவடிக்கைகள் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு தெரியவந்தால் என் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரியுமா என்றால் நான் எந்த மோசடியான நடவடிக்கயிலும் ஈடுபடவில்லை. மணல்மேடு காவல் நிலையத்தில் 8 மாதம் 07 நாட்கள் பணிபுரிந்தேன். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 24 மணிநேர டைரி என்று உள்ளது என்றால் சரி. அன்றன்றைக்கு நடக்கும் சங்கதிகளை அதில் பதிவு செய்யவேண்டும் என்றால் பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்வோம். புகார்தாரர் ஹபீப்ஜான் மற்றும் 17 நபர்கள் மீது 1ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதுபோல் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அப்படி கொடுத்த புகாரின்பேரில் நடவடிக்கை எடுக்காததால் மேலதிகாரிகளிடம் மனு கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி எந்த புகார் எங்கள் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. புகார்தாரர் ஹபீப்ஜானுக்கு ஆதரவாக செயல்பட்டு 1ம் எதிரியை வீட்டை விட்டு வெளியேற்றி 3 கோடி ரூபாய் சொத்தை புகார்தாரரிடம் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி வீட்டை விட்டு வந்தபிறகு அப்போதிருந்த உதவி ஆய்வாளர், ஆய்வாளர் புகார்தாரர் கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் நான் தான் அதன்பிறகு வந்து அவருக்கு ஆதரவாக வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் மீது புகார்தாரருக்கு ஆதரவாக செயல்பட்டு பொய் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி புகார் கொடுத்தும் புகார்தாரருக்கு ஆதரவாக செயல்பட்டு அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

29/11/24
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

29/11/24